முருகப்பெருமான் துணை

**மகான் கூற்றுவ நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.02.2023, செவ்வாய்கிழமை

1. பிரணவப் பேராற்றல் கொண்ட
பிரபஞ்ச நாயகனே அரங்கா
சரவணச் சுடரேற்றி அருளும்
சற்குருவே ஞான தேசிகா
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் சுபகிருது சால் திங்கள்
ஆசிபட நவதிகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 09 ம் நாள், 21.02.2023 செவ்வாய்கிழமை)
அருளுவேன் கூற்றுவ நாயனார் யானும்
3. யானும் அனுகூல ஆசிதனை
உலக நலம்பெற உரைப்பேன்
ஞானவான்கள் நிறைந்த சபை
ஞாலமதில் படைக்க வேண்டி
4. வேண்டியே அவதாரம் எடுத்து
வேலவன் மகா சக்தியாக
தொண்டு வழி மக்களை நோக்கி
திருவருளாக இறங்கி அருளும்
5. அருளும் அரங்கன் மார்க்கம்
அகத்தியர் ஆறுமுகனார் தந்த
அருள்மிக்க சன்மார்க்கமாகும்
அனுகி அனைவரும் வந்து
6. வந்துமே அருளாசிதனை பெற
வணங்கி தீட்சை பெற
சிந்தை வைத்துத் தொடர்ந்து
செப்பிடுவேன் தரும வழிதனை
7. வழிதனையும் கடைபிடிக்க
வருமுலகில் மக்களிடை தானும்
அழியாமை எனும் சக்திகூடி
அனுகுபவர் அனைவரும் ஞானி ஆவர்
8. ஆவரே ஆற்றல்மிக்க ஞானிகள்
ஆசிபலம் இன்னும் கூடியே
அவனியில் அரங்கநாமம் சொல்லி
அற்புதம் பலவாற் படைப்பர்
9. படைப்பரே தரும வேலியிட்டு
பசிபிணிதனை முழுமைபட விரட்டி
துடைப்பர் மக்கள் இன்னலை
தொடர்சேவை ஆற்றி இனிதே

10. இனிதே உலகமெங்கும் நல்லோர்
இணைவை கூட்டி நன்கு
கனிவேலவன் தலைமை ஏற்று
கட்டாய சோதி வழிபாடு செய்து

11. செய்துமே ஞானவான்கள் கூடிய
சிறப்பான ஞானசபை நிறுவி
அய்யமற ஞான ஆட்சிதனை
அகிலம் தனில் அமைத்து மகிழ்வர்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—